**JUDICIAL FORM. 53**
**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII–Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF –CUM– JUDICIAL MAGISTRATE, KOTAGIRI**

**Case No.S.T.C.No. 05/2024**

**Deposition of Witness for Defence DW1**

**திருமதி. ஆஷா ஜான் க/பெ. ஜான் கெஷியா என். ஜார்ஜ் வயது. 56,**

**ஊர். கோத்தகிரி**

**Solemnly affirmed in accordance with the provisions of act x of 1873 on this day of**

**06.04.2026 Witness Signature :**

**DW1 குறுக்கு விசாரணை 11.48 A.M**

1. நான் தற்போது கோத்தகிரியில் வசிக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தற்போது வசித்து வரும் முகவரி ஜெகநந்தா ஹவுஸ், கார்சில்லிரோடு, கோத்தகிரி ஆகும். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை மேற்கண்ட முகவரியில் எனக்கு அனுப்பினால் கிடைக்கும் என்றால் சரிதான். கடந்த 11.11.2008ம் தேதியன்று தீம்பட்டியைச் சேர்ந்த நஞ்சாகவுண்டர் மகன் ராஜன் என்பவரிடம் 2 செண்ட் இடம் வாங்கினேன் என்று சொன்னால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் 11.11.2008ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் என்றால் சரிதான். **அந்த கிரையப் பத்திரம் பு.த.சா.ஆ. 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இந்த கிரையப் பத்திரம் இன்றைய தேதிவரை புகார்தாரரிடம் உள்ளது என்று சொன்னால் சரிதான். வழக்கில் கண்ட காசோலையில் என்னுடைய பெயர் ஆஷா ஜான் உள்ளது என்று சொன்னால் சரிதான். அதில் எனது கணவரின் பெயரும் உள்ளது என்றால் சரிதான். ஜாயின்ட் அக்கவுண்ட்டில் யாராவது ஒருவர் கையெழுத்து செய்தால், அது செல்லும் என்று

சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. தெரியாது என்று, நான் தெரிந்து கொண்டே பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

2. நானும் என் கணவரும் 2 வருடங்களுக்கு முன்பு, வழக்கு நிலுவையிலிருக்கும் போது, புகார்தாரருக்கு Stamp paperல் நாங்கள் இருவரும் வழக்கில் கண்ட தொகையை கொடுத்துவிடுவதாக எழுதிக் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் நான் வாங்கிய தொகை ரூ. 2,00,000/– தருவதாக எழுதிக்கொடுத்துள்ளோம். அதில் சாட்சி கையெழுத்து எனது கணவர் செய்துள்ளார். புகார்தாரர் கையெழுத்து நான் செய்துள்ளேன். மேற்கண்ட முகவரியில் உள்ள புகார்தாரருக்கு ஆஷா ஜான் ஆகிய நான் 10.09.2023 அன்று வாங்கிய பணத்திற்கு, பெடரல் வங்கி காசோலை எண். 075761 தொகை எழுதிக கொடுத்தேன். அதில் எனது வங்கியில் பணம் இல்லாத காரணத்தில் காசோலை புகார்தாரரிடமே சென்று விட்டது. இதன் காரணத்தால் 07.11.2023 வழக்கு எண். 05/2023 அன்று கோத்தகிரி நீதிமன்றத்தில் எனது பெயரில் வழக்கு தொடுத்தார். அது நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. தற்போது புகார்தாரருக்கும் எனக்கும் ஏற்பட்ட உடன்படிக்கையில் புகார்தாரருக்கு எதிரியாகிய நான் 6 மாத காலத்திற்குள் பணத்தை கொடுப்பதாக ஒப்புக்கொண்டு நமக்குள் பேசி ஒப்பந்தம் செய்யப்பட்டது. இப்படிக்கு ஆஷா ஜான் என்று கையெழுத்து செய்து கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். தாங்கள் செய்து கொண்ட பரிவர்த்தனையில் ரூ.2,00,000/– என்று குறிப்பிட்டு எழுதவில்லை என்று சொன்னால் சரிதான். அந்த காசோலையில், கண்ட தொகையை நான் தான் புகார் தாரரிடம் பெற்றேன் என்றாலும், தற்போது எனது பெற்றார் என்று முன்னுக்குபின் முரணாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. நான் எனது முதல் விசாரணையில் கோத்தகிரியில் வசிப்பதாகவும்,

தற்போது கேரளாவில் இருந்து வருவதாகவும் முன்னுக்குபின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கறிஞர் என்பதால், இந்த வழக்கு விபரங்கள் பற்றி எனக்கு நன்றாக தெரியும் என்றால் சரிதான். அவ்வாறு இருந்தும் காசோலை தொகையை எதிரிக்கு கொடுக்க மறுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**Taken down by/before me in open court read over/ interpreted to the witness in the presence of the accused/ accused's pleader and admitted by the witness to be correct.**

**Sd/- G. Amirdham, 06.04.2026**
**Judicial Magistrate,**
**Kotagiri**